بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 16/06/2023 அன்று U.K. - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தத்திற்காக மேற்கொண்ட ஆயத்தங்கள் மற்றும் புறப்படுதல் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

மக்கத்து காஃபிர்கள் போருக்காக செய்த ஆயத்தங்களின் சில நிலைகள் எடுத்துரைக்கப்பட்டிருந்தன. இதுகுறித்து மேற்கொண்டு இவ்வாறு விளக்கம் வருகிறது: உமய்யா பின் கல்ஃப் மற்றும் அபூலஹப் ஆகிய இருவரும் போருக்கு செல்வதில் இருந்து தவிர்ந்து கொள்ள நினைத்தார்கள். எனவே, அபூஜஹ்ல் உமய்யாவிடம் வந்து, 'நீ மக்காவின் தலைவர்களில் ஒருவன் ஆவாய். நீ போரில் கலந்து கொள்ளவில்லை என்றால், மக்களும் பின்வாங்கி விடுவார்கள். எனவே, நீ கண்டிப்பாக எங்களோடு புறப்படு. வேண்டுமானால், ஓரிரு நாள் பயண தூரம் வரை சென்ற பிறகு திரும்பி வந்து கொள்' என்று கூறினான்.

உண்மையில், **உமய்யா போருக்கு செல்ல ஏன் அஞ்சினான் என்றால், உமய்யாவின் அழிவைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள்.** சஹீஹ் புகாரீயில் இது பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. **அபூலஹப்** தனக்கு பதிலாக வேறு ஒருவனை அனுப்பினான். அவன் **தான் போருக்கு செல்லாமல் இருந்ததற்கு, ஆத்திக்கா பின்த் அப்தில் முத்தலிப் கண்ட கனவே காரணமாக இருந்தது.** 'ஆத்திக்காவின் கனவு, கையில் இருந்து ஒரு பொருளை எடுத்துக் கொண்டது போன்றதாகும்' என்று அபூலஹப் கூறி வந்தான்.

மக்கத்து காஃபிர்களின் படை மிகவும் உத்வேகத்துடனும் ஆரவாரத்துடனும் புறப்பட்டது. படையில் 1000 பேர் இருந்தனர். அவர்களிடம் 100 அல்லது சிலரது பார்வையில் 200 குதிரைகள், 700 ஒட்டகங்கள், 600 கவசங்கள் மற்றும் ஈட்டி, வாள், வில் அம்பு போன்ற இதர போர்த் தளவாடங்களும் போதுமான அளவில் இருந்தன. குறைஷிகள் மக்காவிலிருந்து புறப்பட்டு 'ஜுஹ்ஃபா'வில் தங்கினார்கள். அது மதீனாவை நோக்கி 82 மைல் தொலைவில் அமைந்துள்ளது. அங்கு **'ஜைஹம் பின் ஸலத்' என்பவன் மக்களிடம் தன் கனவு ஒன்றைக் கூறினான்.**

அதில் அவன் கண்ட காட்சியாவது, ''ஒரு நபர் குதிரையில் பயணித்து வருகிறார். அவருடன் ஓர் ஒட்டகமும் இருக்கிறது. அவர், 'உத்பா பின் ரபீஆ, ஷீபா பின் ரபீஆ, அபுல்ஹகம் பின் ஹிஷ்ஷாம், அதாவது, அபூஜஹ்ல், உமய்யா பின் கல்ஃப் மற்றும் இன்ன இன்ன குறைஷிய தலைவர்கள் கொல்லப்பட்டனர்'

என்று கூறுகிறார். பிறகு அந்த நபர் தமது ஒட்டகத்தின் கழுத்தில் ஈட்டியால் குத்தி அதை நம்முடைய கூடரங்கள் பக்கம் விட்டு விட்டார். அந்த ஒட்டகத்தின் ரத்தம் நமது படையின் எல்லாக் கூடாரத்திலும் பட்டது.'' இந்தக் கனவைக் கேட்டதும் அபூஜஹ்ல் ஏளனத்துடனும் கோபத்துடனும், 'பனூ அப்தில்முத்தலிப் கோத்திரத்தில் இருந்து இதோ இன்னொரு நபி பிறந்து விட்டார். நாளை நாங்கள் போர் செய்தால், யார் கொல்லப்படுகிறார் என்பது நன்றாகத் தெரிந்து விடும்' என்றான்.

அபூஸுஃப்யானும், 'போர் செய்வதைத் தவிர்க்க முயற்சி செய்யுங்கள்' என்று அபூஜஹ்லுக்கு செய்தி அனுப்பியிருந்தார். அபூஸுஃப்யானின் இந்த செய்தியைக் கேட்ட அபூஜஹ்ல், 'இறைவன் மீதாணையாக! நாங்கள் கண்டிப்பாக பத்ர் களம் வரை செல்வோம். அங்கு எங்களுடைய ஒட்டகங்களை அறுப்போம்; மது அருந்துவோம்; எங்களுடைய அடிமைப் பெண்கள் எங்களுக்கு முன்னால் பாடல்களைப் பாடுவார்கள். இவ்வாறு எங்களது பயணம் மற்றும் படையைப் பற்றிய செய்தி முழு அரேபியாவையும் சென்றடையும். மேலும், அவர்கள் எப்பொழுதும் எங்களுக்கு அஞ்சி கொண்டே இருப்பார்கள்' என்று கூறினான்.

அபூஸுஃப்யான் அனுப்பிய இந்த செய்தி கிடைத்ததும், பனூ அத்தீ மற்றும் பனூ ஸுஹ்ரா கோத்திரத்தினர் திரும்பிச் சென்று விட்டனர். போரில் கலந்து கொள்ளவில்லை. அபூதாலிப் அவர்களின் மகன் தாலிபும் காஃபிர்களுடன் இருந்தார். வழியில் காஃபிர்கள் அவரைப் பார்த்து, நீர் எங்களுடன் வந்து விட்டீர்தான்; ஆனால், உம்முடைய உண்மையான அனுதாபங்கள் முஹம்மத் ((ஸல்) அவர்களுடன்) இருக்கின்றன என்பது எங்களுக்குத் தெரியும்' என்று கூறினார்கள். இதைக் கேட்ட தாலிப் தம் நண்பர்கள் பலருடன் திரும்பி வந்து விட்டார். தபரீயின் ஓர் ஆதாரத்தில் இவ்வாறும் கூறப்பட்டுள்ளது: தாலிப் நிர்பந்தத்திற்காளாகி இணைவைப்பாளர்களுடன் புறப்பட்டார். ஆனால், கொல்லப்பட்டவர்களிலும் கைதிகளிலும் அவரைப் பற்றிய குறிப்பு கிடைக்கவில்லை. இவ்வாறே, அவர் வீட்டிற்கும் திரும்பவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ரமலான் மாதம் 12 ஆம் தேதி ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு மதீனாவில் இருந்து புறப்பட்டார்கள். அன்னாருடன் முந்நூறுக்கும் சற்று அதிகமான சஹாபா பெருமக்கள் இருந்தார்கள். பெரும்பாலான அறிவிப்புகளில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 313 பேர் என்று கூறப்பட்டுள்ளது. அவர்களில் 74 பேர் முஹாஜிர்களும் மற்றவர்கள் அன்ஸாரிகளும் இருந்தார்கள். அன்ஸாரிகளும் பங்கு பெற்ற முதல் படைப் பிரிவு இதுதான். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களுக்கு மதீனாவில் இருக்குமாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். ஏனென்றால், அவர்களின் துணைவியாரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகளுமான ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்கள் நோயுற்றிருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் போருக்காக புறப்படலான போது, உம்மே வரக்கா பின்த் நவ்ஃபல் எனும் ஒரு பெண்மணி, 'எனக்கும் போருக்கு செல்ல அனுமதி தாருங்கள். நான் தங்களுடன் நோய்வாய்ப்பட்டவர்களை கவனித்துக் கொள்வேன். அல்லாஹ் எனக்கும் உயிர்த் தியாகத்திற்கான நல்வாய்ப்பு வழங்கலாம்' என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'நீர் உமது வீட்டிலேயே இருப்பீராக! அல்லாஹ் உமக்கு

ஷஹாதத்தை வழங்குவான்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில், ஹஸ்ரத் உம்மே வரக்கா (ரலி) அவர்களை அவர்களின் அடிமையும் அடிமைப் பெண்ணும் கொன்று விட்டனர். இவ்வாறு ஹுஸூர் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புப்படி அவர்கள் ஷஹீது ஆகும் நற்பேறு பெற்றார்கள்.

இந்தப் போரில் முஸ்லிம்களிடம் ஐந்து குதிரைகள் அல்லது சில அறிவிப்புகளுக்கு ஏற்ப இரண்டு குதிரைகள் இருந்தன. 60 கவசங்கள் இருந்தன. 70 அல்லது 80 ஒட்டகங்கள் இருந்தன. கண்ணியத்திற்குரிய சஹாபாவுக்காக (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த துஆவை செய்தார்கள்: "அல்லாஹ்வே! இவர்கள் வெறும் காலோடு இருக்கிறார்கள். இவர்களுக்குப் பயண விலங்குகளை வழங்குவாயாக! இவர்கள் ஆடையற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு ஆடை வழங்குவாயாக! இவர்கள் பசித்தவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு வயிறார உணவு வழங்குவாயாக! இவர்கள் மிகவும் நெருக்கடியில் இருக்கிறார்கள். உனது அருளால் இவர்களைத் தேவையற்றவர்களாக ஆக்கி விடுவாயாக!'

ஆக, இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. போருக்குப் பிறகு, பயண விலங்கு கிடைக்காதவர் ஒருவரும் இருக்கவில்லை. எந்தஅளவு பயணப் பொருட்கள் கிடைத்தன என்றால், உண்ணுதல் பருகுதல் ஆகியவற்றில் எந்த நெருக்கடியும் இருக்கவில்லை. ஆடையற்றவர்களுக்கு ஆடைகள் வழங்கப்பட்டன. போர்க் கைதிகளை விடுவித்ததனால் எந்த அளவு ஈட்டுத் தொகை கிடைத்தது என்றால், ஒவ்வொரு குடும்பமும் வசதி படைத்ததாக ஆகிவிட்டது.

**ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மட்டுமின்றி, (இன்னும்) சில கலப்பற்ற மக்களும் இருந்தார்கள். அவர்களுக்கும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் போருக்கு செல்ல அனுமதி வழங்கவில்லை.** அவர்களில், அபூ உமாமா பின் ஸஃலபா (ரலி) அவர்களின் தாயார் நோயுற்றிருந்தார்கள். மற்றவர்களைப் போருக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த ஹஸ்ரத் சஃது பின் உபாதா (ரலி) அவர்களைப் பாம்பு கடித்து விட்டது. எனவே, அவர்களால் பேருக்கு செல்ல முடியவில்லை. இதேபோன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வழியில், குறைந்த வயதுடைய போராளிகளைத் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். அவர்களில் உமைர் பின் அபீவக்காஸ் (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள். அவர்கள் திரும்பி செல்வதற்கான கட்டளையைக் கேட்டு அழ ஆரம்பித்து விட்டார்கள். இதனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அனுமதி வழங்கி விட்டார்கள். ஆக, அவர்கள் போரில் கலந்து கொண்டார்கள். ஷஹாதத் (உயிர்த்தியாகம்) எனும் பானத்தையும் அருந்தினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

'இன்று காலம் எப்படி இருக்கிறது என்றால், மக்கள் இஸ்லாம் மற்றும் ஈமானுக்காகத் தியாகங்கள் செய்வதை விட்டும் தப்பிப்பதற்காக காரணங்களையும், சாக்குப் போக்குகளையும் தேடுகிறார்கள். நேரம் வரும்பொழுது, எங்களுக்கு இன்ன கஷ்டம் இருக்கிறது, அந்தத் தடை இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால், ஹுஸூர் (ஸல்) அவர்களின் ஆன்மீக ஆற்றலின்கீழ் முஸ்லிம்களிடம் தியாகம் செய்வதற்கான எத்தகைய உணர்வு உருவாகி விட்டிருந்தது என்றால்,

ஆண்களும், பருவ வயதை அடைந்த பெண்களும் ஒருபுறம் இருக்கட்டும், பிள்ளைகளும் இந்த உணர்வால் நிறைந்து காணப்பட்டார்கள்.'

இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் அப்துல்லாஹ் பின் உம்மு மக்தூம் (ரலி) அவர்களை மதீனாவின் அமீராக நியமித்தார்கள். ஆனால், வழியில் இருக்கும் போது, 'அப்துல்லாஹ் ஒரு பார்வையற்ற மனிதராவார்; மதீனாவிற்கான ஏற்பாடு வலுவாக இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தில் ஹுஸூர் (ஸல்) அவர்கள் அபூலுபாபா பின் முன்ஸிர் (ரலி) அவர்களை மதீனாவின் அமீராக நியமித்து திருப்பி அனுப்பி விட்டார்கள். இவ்வாறே, குபாவுக்கு ஆஸிம் பின் அத்தீ (ரலி) அவர்களை அமீராக நியமித்தார்கள்.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் இஸ்லாமியப் படையின் கொடியை ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இந்தக் கொடி வெள்ளை நிறத்தில் இருந்தது. இது மட்டுமின்றி, இரண்டு கருப்புக் கொடிகளும் இருந்தன. அவற்றில் ஒன்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் இருந்தது. இந்தக் கொடி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மேலே போர்த்திக் கொள்ளும் ஆடையால் தயாரிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது கருப்புக் கொடி அன்ஸாரி சஹாபி ஒருவரிடம் இருந்தது.

ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, இஸ்லாமிய படையிடம் மூன்று கொடிகள் இருந்தன. முஹாஜிர்களின் கொடி ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களிடமும், 'கஸ்ரஜ்' கோத்திரத்தின் கொடி ஹஸ்ரத் ஹப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்களிடமும், 'அவ்ஸ்' கோத்திரத்தின் கொடி ஹஸ்ரத் சஃது பின் முஆஸ் (ரலி) அவர்களிடமும் இருந்தது.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மற்ற விளக்கங்கள் இனி எடுத்துரைக்கப்படும் என்று கூறிய பிறகு, கீழ்வரும் மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து அவர்களின் ஜனாஸா தொழுகை தொழப்படும் என்று அறிவித்தார்கள்:*

யூகேவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய **ஷேக் குலாம் ரஹ்மானீ சாஹிப்,** புர்கினா ஃபாஸோவின் டோரீ மண்டலத்தின் மஹ்தியாபாதைச் சேர்ந்த **தாஹிர் ஆஃகு முஹம்மத் சாஹிப்,** மதிப்பிற்குரிய **காஜா தாவூத் அஹ்மத் சாஹிப்,** கனடாவின் சிஸ்கா டவுனைச் சேர்ந்த மதிப்பிற்குரிய **சய்யித் தன்வீர் ஷாஹ் சாஹிப்** மற்றும் இயக்கத்தின் முரப்பி மதிப்பிற்குரிய **ரானா முஹம்மத் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப்** ஆகியோர்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம்களின் மஃக்ஃபிரத் மற்றும் உயர்வான அந்தஸ்திற்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ

فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ

بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)